செ.வெ.எண்.12 நாள்:06.01.2018

# பத்திரிக்கை செய்தி

## பொங்கல் பண்டிகை கதர் மற்றும் கிராமப்பொருட்கள் விற்பனை

அண்ணல் காந்தியடிகளால் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு ஆண்டு முழுவதும் வாழ்வளிக்க வேண்டுமென்ற சீரிய நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது தான் கதர் கிராமத் தொழில்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கிராமப் புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு கிராமிய நூற்பு நிலையங்கள் மூலம் நூற்பு பணிகளும் கதர் உற்பத்தி கிளைகள் மூலம் நெசவு பணிகளும் வேலை வாய்ப்பாக அளிக்கப்பட்டு வருகிறது.

கதர் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பொது மக்கள், அரசு துறைகள் மற்றும் அரசு பணியாளர்கள் விரும்பி வாங்குவதால் கிராமங்களில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இதனை ஊக்குவிக்கும் விதமாக, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கதர் மற்றும் கிராமப்பொருட்கள் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு 2017-18 வருடாந்திர கதர் விற்பனை குறியீடாக ரூ.102.70 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டதில் ரூ.71.00 இலட்சம் விற்பனை எய்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி ஆகிய ஊர்களில் கதர் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், செய்துங்கநல்லூர், நான்குநேரி, வள்ளியூர், கடையம், செங்கோட்டை, கீழப்பாவூர், களக்காடு, இராதாபுரம் ஆகிய இடங்களில் தற்காலிக விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்காணும் கதர் விற்பனை நிலையங்களிலும், மற்றும் அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கதர் விற்பனை நிலையங்களிலும் தரமிக்க கதர் வேஷ்டிகள், துண்டு ரகங்கள், ரெடிமேட் சட்டைகள், மெத்தை, தலையணைகள், பெட் ஷீட்கள், கண் கவரும் கதர் பட்டு ரகங்கள், கதர் பாலியஸ்டர் மற்றும் உல்லன் ரகங்கள் மற்றும் தேன், குளியல், சோப்புகள், சாம்பிராணி பூஜை பொருட்கள் பனைவெல்லம் பனைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக

மத்திய, மாநில அரசுகளின் உதவி பெற்று கதர் மற்றும் பாலி வஸ்திரா ரகங்களுக்கு 30 சதவீதமும், உல்லன் ரகங்களுக்கு 20 சதவீதமும் சிறப்பு தள்ளுபடி அனுமதிக்கப்படுகிறது.

அரசு துறைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாத ஊதியத்தில் 10 சம தவணைகளில் பெற்றிடும் வகையில் கடனுக்கும் கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொது மக்கள் மற்றும் அரசுத் துறை ஊழியர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் கதர் அங்காடிகள் செயல்படும்.

எனவே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுத்துறை நிறுவனங்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் போக்குவரத்து கழகங்களைச் சார்ந்த அனைத்து ஊழியர்களும், பொது மக்களும் கதர், பட்டு, பாலியஸ்டர், உல்லன் ரகங்கள் மற்றும் கிராமப் பொருட்கள் தள்ளுபடி விலையில் கொள்முதல் செய்து பயனடைவதுடன் இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விற்பனை குறியீட்டினை எய்திட ஒத்துழைப்பு அளிக்குமாறும் கதர் வாரியத்தின் சார்பாக வேண்டப்படுகிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.